**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **SC.No.2/2010**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ.சா**. 27**
**Defence Court**

Name : கோமதி

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 26.05.2022

<u>முதல் விசாரணை</u>:

நான் தற்போது கோபிசெட்டிபாளையத்தில் குடியிருந்துவருகிறேன். நான் கோபிசெட்டிபாளையத்தில் செவிலியராக பணிபுரிந்துவருகிறேன். எனது சொந்த ஊர் தென்காசியாகும். எனக்கு மூன்று குழந்தைகள் உள்ளனர். எனது கணவர் உயிருடன் இல்லை. அவர் கொலைசெய்யப்பட்டு இறந்துபோனார். சுமார் 12 வருடங்களுக்கு முன்னர் என் கணவர் தென்காசியில் சிலரால் வெட்டி

கொலை செய்யப்பட்டுவிட்டார். கோவில் பிரச்சனைக்காக இஸ்லாமியர்கள் எனது கணவரை கொலை செய்துவிட்டதாக கேள்விப்பட்டேன். என் கணவரை நான் மயானத்தில் வைத்து பார்த்தேன். இறந்தவர் என் கணவர் தான். எனது கணவருடன் கூட பிறந்த 6 சகோதரர்கள் ஆவார்கள். 3 பேர் உயிருடன் உள்ளார்கள். முதலில் குமார் பாண்டியன் என்பவர் வெட்டுபட்டு இறந்துபோனார். அவரும் கோவில் பிரச்சனை சம்மந்தமாக வெட்டுபட்டு இறந்துபோனார். மற்ற மூவரும் கோவில் பிரச்சனை சம்மந்தமாக இஸ்லாமியர்களால் வெட்டுபட்டு இறந்தார்கள் என்று கேள்வி பட்டேன். நான் பாளையங்கோட்டை அரசு மருத்துவமனை சென்று என் கணவரை அடையாளம் காட்டவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது</u>**:-

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னை போலீசார் 14.08.2007ம் தேதி விசாரித்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. என்னை வழக்கு சம்பந்தமாக களக்காடு காவல் காவல் ஆய்வாளர் விசாரித்தார் என்றும் அப்போது இறந்துபோன செந்தில் என்ற செந்தில் குமார் என்பவரை நான் காதலித்து திருமணம் செய்துகொண்டேன் என்றும் 8 மாதங்களுக்கு முன்னால் என் கணவரின் சகோதரர் குமார் பாண்டியன் என்பவரை இஸ்லாமியர்கள் கொலை செய்து விட்டதாக ஒரு முன் விரோதம் இருந்தது என்றும், மேற்படி முன் விரோதம் காரணமாக 14.08.2007ம் தேதி அதிகாலையின் வீட்டை விட்டு சென்ற என் கணவர் வீடுதிரும்பவில்லை என்றும் பகல் 10.30 மணிக்கு கூலக்கடை பஜாரில் என் கணவரையும் அவரது சகோதரர்கள் சுரேஷ் மற்றும் சேகர் ஆகியோர்களையும்

இஸ்லாமியர்கள் சிலர் கொலை செய்துவிட்டதாக கேள்விபட்டேன் என்றும் சம்பவம் பற்றி தெரிந்து நான் தென்காசி அரசு மருத்துவமனைக்கும் பின்னர் திருநெல்வேலி பாளையங்கோட்டை அரசு மருத்துவமனைக்கும் சென்று அங்கு வைத்திருந்த என் கணவரின் பிரேதத்தை அடையாளம் காட்டினேன் என்று சொன்னால் சரியல்ல. நான் 14.08.2007ம் தேதி காலை 10.30 மணிக்கு வீட்டில் இருந்தபோது சம்பவம் பற்றி கேள்வி பட்ட விபரத்தையும் அன்றைய தினமே தென்காசி அரசுமருத்துவமனைக்கு சென்ற விபரத்தையும் வேண்டுமென்றே எதிரிகளுக்கு பயந்து மறைக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரித்த விபரத்தையும் வேண்டுமென்றே விசாரிக்கவில்லை என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது கணவரின் தகப்பனார் பெயர் சொர்ணதேவர் . அவருக்கு 2 மனைவிகள். சொர்ணத்தேவரின் 2 மனைவிக்கு 2 மகன்களும் 1 மகளும் இருப்பதாக கேள்விபட்டேன். மொத்தம் அவருக்கு 14 குழந்தைகள். 2ம் மனைவி மற்றும் குழந்தைகள் பற்றி விபரம் எனக்கு தெரியாது. எங்கள் திருமணத்திற்கு பின்னர் நானும் என் கணவரும் கூட்டு குடும்பமாக வசிக்கவில்லை. சொர்ணதேவரின் 2 மனைவியின் குழந்தைகளை நான் பார்த்திருக்கிறேன். சொர்ணதேவர் இறந்தபின்னர் தான் அவர்களை பற்றி தெரிந்து பேசினேன். சொர்ணதேவர் என் கணவர் இறந்தபின்னர் தான் இறந்துபோனார். சொர்ணதேவருக்கு நிறைய சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். எனது கணவர் இறப்பதற்கு முன்னர்சொர்ணதேவரின் 1 மனைவி குழந்தைகளுக்கும் 2ம் மனைவி குழந்தைகளுக்கும் இடையே விரோதம் இருந்தது என்றால் சரியல்ல. என் கணவர் மீது காவல் நிலையத்தில் ஒரு வழக்கு நிலுவையில் இருந்தது. என் கணவர் தேசிய

பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தார் என்றால் சரியல்ல. என் கணவர் அடிதடி பிரச்சனை சம்மந்தமாக ஜெயிலுக்கு சென்று வந்தார். அவர் என்ன வழக்கிற்காக சிறை சென்றார் என்ற விபரம் எனக்கு தெரியாது. எதிரிகளுக்கும் என் கணவருக்கும் முன் விரோதம் உள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இஸ்லாமியர்களுக்கும் என் கணவர் குடும்பத்திற்கும் விரோதம் இருந்து வந்ததா என்ற விபரம் எனக்கு நேரில் தெரியாது.